## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.60/2021

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி சி. நிர்மலா, உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10 வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு ஜனவரி மாதம் 5 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராமமூர்த்தி | மதம் | : |
| த/பெ | : ராமகிருஷ்ணம நாயுடு | ஜாதி | : |
| வயது | : 64 | கிராமம் | : எண். எண். கண்டிகை |
| தொழில் : | | வட்டம் | : |

05.01.2024

**வா.சா. 1 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து **என்னுடையதுதான்**. எனது பிரமாண வாக்குமூலத்தை நான் தமிழில் தாக்கல் செய்கிறேன். நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் பிரமாண வாக்குமூலத்தை தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்குத் தெரியும். எனக்கு படித்துக் காண்பிக்கப்பட்டது.
2. 08.07.2021 தேதியில் தாவா சொத்திற்கு எனது பெயரில் கொடுத்தப்பட்டுள்ள பட்டா கணினி நகல் **வா.சா.ஆ 1** ஆகும். தாவா சொத்திற்கு எனது பெயரில் 27.08.2021 தேதியில் செலுத்தப்பட்டுள்ள வீட்டு வரி ரசீது அசல் **வா.சா.ஆ 2** ஆகும். தாவா சொத்தில் எனது பெயரில் உள்ள மின் இணைப்பிற்குண்டான உபயோக கட்டணத்தின் அசல் கணினி நகல் (3 எண்ணிக்கை) **வா.சா.ஆ 3** ஆகும். தாவா சொத்தின் புல வரைப்படம் பதிவிறக்கம்

செய்யப்பட்ட கணினி நகல் **வா.சா.ஆ 4** ஆகும். தாவா சொத்தின் மாதிரி வரைப்படம் **வா.சா.ஆ 5** ஆகும். தாவா சொத்திற்கு 02.01.1990 முதல் 27.08.2021 தேதி வரையிலான 28.08.2021 தேதியிட்ட வில்லங்க சான்றிதழ் கணினி நகல் **வா.சா.ஆ 6** ஆகும். 31.01.1994 ம் தேதியிட்ட தாவா சொத்திற்கு எனது பெயரில் உள்ள கிரையப் பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ 7** ஆகும். அசல் ஆவணம் நான் கூட்டுறவு வங்கியில் கடன் பெற்றுள்ளபடியால் அங்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. தாவாவில் கோரியுள்ளபடி தீர்ப்பாக வேண்டும்படி கேட்டுக்கொள்கிறேன்.